வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.5/21

வழக்கு சாட்சி - அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌமியாபிரித்தி | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 04.05.23

**( 1**ம் எதிரி ஆஜர்**. 2**ம் எதிரி ஆஜர் இல்லை**. 2**ம் எதிரி சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மகளிர்சுயஉதவிகுழுவில் வேலை செய்துவருகிறேன். 12.10.18ம் தேதி காலை 9.45மணியளவில் தேனியில் உள்ள எங்களது தலைமை அலுவலகத்திற்கு மீட்டிங்காக புதுபேருந்து நிலையத்திலிருந்துநடந்து சென்றுக்கொண்டிருந்தேன். சிவாஜி நகர் திரும்பும் இடத்தில் எனக்கு பின்னால் கழுத்தில் யாரோ அடித்ததுபோல் இருந்தது. நான் என்ன என்று பார்க்கும் போது என்னை கடந்து இரண்டு பேர் இருசக்கரவாகனத்தில் சென்றார்கள். அதில் பின்னால் அமர்ந்திருந்த நபரின் கையில் செயின் இருந்தது., நான் என்னஎன்று என் கழுத்தை பார்த்த போது என்னுடைய தாலி செயினை என் கழுத்தில் காணவில்லை. என் தாலி மட்டும் நான் போட்டிருந்த சுடிதார் துப்பட்டாவில் மாட்டியிருந்தது. நான் உடனே என் கணவருக்கும் என்னுடன் வேலை பார்க்கும் கஸ்தூரி என்பவருக்கும் போன் பண்ணி தகவல் சொன்னேன். அவர்களும் எனது கணவரும் வந்தவுடன் தேனி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கு பிறகு பிப்ரவரி மாதம் 2019ம் வருடம் காவல்நிலையத்திலிருந்து போன் பண்ணி என்னை காவல்நிலையம் வரசொன்னதன் பேரில் நான் காவல்நிலையம் சென்றேன். அங்கு எனது செயினை அடையாளம் காட்டினேன். அங்கிருந்த மணிகண்டன் என்பவரை அடையாளம் காட்டி இவர்தானா என்று என்னிடம் கேட்டார்கள். நானும் இவர் தான் என்று அடையாளம் காட்டினேன். அதற்கு பிறகு நீதிமன்றம் மூலம் எனது செயினை பெற்றுக்கொண்டேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரை தான் காவல்நிலையத்தில் போலிசார் என்னிடம் அடையாளம் காண்பித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. என்னிடம் காண்பிக்கப்படும்புகைப்படத்தில் உள்ள செயின் தான் சம்பவ சமயத்தில் எதிரிகள் என்னிடமிருந்த பரித்து சென்றது தான். புகைப்படம் சாபொ1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.